செய்தி வெளியீடு எண்.792 நாள். 7.12.2007

# பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த திறன்மிக்க மாணவ மாணவியர் தாம் விரும்பும் சிறந்த மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து படிக்க நிதியுதவி வழங்கும் புதிய திட்டம்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மாணவர்களுக்கு நிதியுதவிகளை வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த திறன்மிக்க மாணவ மாணவியர்கள் அரசுப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், அவர்களது பெற்றோரின் பொருளாதாரச் சூழ்நிலைகள் காரணமாக அவர்கள் விரும்பும் சிறந்த பள்ளிகளில் சேர்ந்து தங்கள் மேல்படிப்பினைத் தொடர இயலாத நிலையினைக் கருத்தில் கொண்டு, அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் பயின்று அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ மாணவியரில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 3 மாணவர், 3 மாணவியர், மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர், 2 மாணவியர் என ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பேர் வீதம் மொத்தம் 300 மாணவ மாணவியருக்கு அவரவர் விருப்பத்திற்கேற்பச் சிறந்த பள்ளிகளில் சேர்ந்து பயில வாய்ப்பளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமென 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், ஒவ்வொரு மாணவருக்கும் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் சேர்ந்து படிக்க ஆண்டொன்றுக்குக் கல்விக் கட்டணமாக 8 ஆயிரம் ரூபாயும், பராமரிப்புக் கட்டணமாக 3 ஆயிரத்து 500 ரூபாயும், விடுதிக் கட்டணமாக 15 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பயிற்சிக் கட்டணமாக ஆயிரத்து ஐநூறு ரூபாயும் என மொத்தம் 28 ஆயிரம் ரூபாய் வீதம், இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் வீதம் செலவினம் மேற்கொள்ள ஏற்கனவே முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்படி, நடப்பாண்டில் தமிழகம் முழுவதிலும் பதினோராம் வகுப்பில் பயிலும் 300 மாணவ மாணவியர்களுக்கு 84 இலட்ச ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதன் அடையாளமாக சென்னை, காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், திருவாரூர், திருச்சி, தேனி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 20 மாணவ மாணவியர்க்கு 4 இலட்சத்து 62 ஆயிரத்து 732 ரூபாய் மதிப்புடைய காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி, தமிழக அரசு வழங்கும் இந்த உதவித் தொகையைப் பயன்படுத்தி நன்கு பயின்று சிறந்த இளைஞர்களாக உருவெடுத்து நமது தமிழகத்திற்குப் பெருமை தேடித் தருமாறு கூறி தமது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உதவி பெற்ற மாணவ மாணவியர் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த தங்களுக்குப் பெரும்பயன் அளித்து ஊக்கப்படுத்திடும் இந்த அருமையான திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் தங்களுடைய நன்றியைத் தெரிவிப்பதாக மகிழ்ச்சியுடன் கூறினர்.

முன்னதாக, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் மாவட்டங்களில் பணிபுரியும் துறை அலுவலர்கள் அரசுத் திட்டங்களின் பணிகள் மக்களுக்கு விரைந்து கிடைப்பதற்கு உதவும்வகையில் துரிதமாகச் செயலாற்றுவதற்கு ஏதுவாக ஈரோடு, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, கரூர், கோயம்புத்தூர், விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு மொத்தம் 45 இலட்சம் ரூபாய்ச் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 10 ஈப்புகளை முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு ந.வாசுதேவன், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் திரு.ஆர்.எஸ்.கண்ணா ஆகியோர் உடனிருந்தனர்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9